# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

## TNPSC GROUP I, II, IIA, IV - 2024

### TEST BATCH GROUP II, IIA - Model Test 1

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

திண்ணை

1) “மெத்த வணிகலமும் மேவலால்” - எனும் ‘இரட்டுற மொழிதல்’ பாடலில் சந்தக்கவிமணி உணர்த்தும் இரு பொருள்கள் எவை? (தமிழுக்கு, கடலுக்கு)

1. அணிகலன்கள், வணிக வீதிகள்
2. ஐம்பெருங்காப்பியங்கள், வணிகக் கப்பல்கள்
3. ஐஞ்சிறுங்காப்பியங்கள், வணிகத் தலங்கள்

A. 1 சரி B. 2 சரி C. 3 சரி D. 1 (ம) 2 சரி E. விடை தெரியவில்லை

2) அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என அறங்கூறும் அவையம் பற்றி குறிப்பிடும் நூல்

A. மதுரைக்காஞ்சி B. நற்றிணை C. புறநானூறு D. கலித்தொகை
E. விடை தெரியவில்லை

3) “பசிப்பிணி என்னும் பாவி” என பசியின் கொடுமையை எடுத்தியம்பும் நூல் எது?

A. சிலப்பதிகாரம் B. மணிமேகலை C. திருக்குறள் D. புறநானூறு
E. விடை தெரியவில்லை

4) ‘யானை புக்க புலம் போல’ - உவமை கூறும் பொருளைக் கண்டறிக.

A. தானாக்குவது B. வீணாக்குவது C. உருவாக்குவது D. முயற்சி செய்வது
E. விடை தெரியவில்லை

5) “நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது” - திருக்குறள் உணர்த்தும் கருத்து?

A. செல்வங்களில் தலை சிறந்தது - செவியால் கேட்டறியும் கேள்விச்செல்வம்.
B. எவ்வளவு சிறியதாயினும் நல்லவற்றைக் கேட்டல், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.
C. நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர் அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.
D. ஒருவரின் குணத்தையும், குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிகுதியானவை கொண்டு அவரை முடிவு செய்தல்.
E. விடை தெரியவில்லை

6) “பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ:”- இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A. குறுந்தொகை B. நற்றிணை C. புறநானூறு D. பொருநராற்றுப்படை
E. விடை தெரியவில்லை

7) கரிசலாங்கண்ணி பற்றிய கூற்றுகளில் சரியானதைத் தேர்க.

1. வேறு பெயர்கள் : கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம் போன்றவை.
2. கண்பார்வையைத் தெளிவாக்கும், நரையைப் போக்கும்.
3. இரத்த சோகை, செரிமானக் கோளாறு, மஞ்சட்காமாலை முதலிய நோய்களுக்குக் கரிசலாங்கண்ணி நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

A. 1, 2 B. 2, 3 C. 1, 2, 3 D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

8) கீழ்க்காணும் கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?

1. “கலங்காதிரு மனமே” என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானவர்.
2. “சேரமான் காதலி” புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக சிறப்பிக்கப்பட்டவர்.

A. வாணிதாசன் B. பாரதிதாசன் C. கண்ணதாசன் D. வண்ணதாசன்
E. விடை தெரியவில்லை

9) வல்லினம் மிகா இடங்களை தேர்வு செய்க.

1. உவமைத் தொகையில் மிகாது.
2. எழுவாய்த் தொடரில் மிகாது.
3. பெயரெச்சத்தில் மிகாது.
4. வினைத்தொகையில் மிகாது.

A. 2, 3, 4 B. 3, 4 C. 1, 2 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

10) பொச்சாப்பு எனும் சொல்லின் பொருள் ...........

A. பொறுமை B. பொறாமை C. மேன்மை D. சோர்வு E. விடை தெரியவில்லை

11) பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட தம் வீரர்களுடன் சேர்ந்து போர்க்களத்தில் போரிடுவதை குறிக்கும் திணை எது?

A. வஞ்சித்திணை B. நொச்சித்திணை C. உழிஞைத்திணை D. தும்பைத்திணை
E. விடை தெரியவில்லை

12) கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தளமான செம்பியன் கண்டியூர் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A. தூத்துக்குடி B. மதுரை C. சிவகங்கை D. நாகை E. விடை தெரியவில்லை

13) "பண்ணின்தமிழ் இசைப்பாடலின் பழவெய்முழவு அதிர" எனும் தேவாரப்பாடல் அடிகளின் ஆசிரியர் யார்?

A. அப்பர் B. திருஞானசம்பந்தர் C. சுந்தரர் D. மாணிக்கவாசகர்
E. விடை தெரியவில்லை

14) 'எழுதி வந்தான்' இத்தொடரில் பயின்று வரும் எச்சம் என்ன?

A. தெரிநிலைப் பெயரெச்சம் B. குறிப்புப் பெயரெச்சம் C. தெரிநிலை வினையெச்சம்
D. குறிப்பு வினையெச்சம் E. விடை தெரியவில்லை

15) கீழ்க்கண்டவற்றுள் தவறானதைத் தேர்ந்தெடு.

1. துளசிச்செடி மஞ்சட்காமாலைக்கு மருந்தாகப் பயன்படுகின்றது.
2. கீழக்காய் நெல்லி (கீழாநெல்லி) மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி ஆகியவற்றை குணப்படுத்தும்.
3. குப்பைமேனி பசியைத் தூண்டும் சொறி, சிரங்கு நீங்கும்.
4. முருங்கைப்பட்டையை அரைத்துத் தடவினால் முறிந்த எலும்பு விரைவில் கூடும்.

A. 1, 2 B. 2, 3 C. 3, 4 D. 1, 4 E. விடை தெரியவில்லை

16) தவறான தகவல்களை அறிக.

1. அதியமான் நாடு தகடூர் என்றழைக்கப்பட்ட திண்டிவனம்.
2. ஓய்மா நாடு எனப்பட்டது தர்மபுரி.
3. ஓரியின் நாடு எனப்பட்டது நல்லூர்.
4. நள்ளியின் நாடு "நெடுங்கோடு மலை முகடு" எனப்பட்ட தற்போதைய ஊட்டி.

A. 1, 2 B. 1, 2, 4 C. 1, 2, 3 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

17) "குழந்தை வரைந்தது பறவைகளை மட்டுமே வானம் தானாக உருவானது" - இப்புதுக்கவிதையின் ஆசிரியர் யார்?

A. கல்யாண்ஜி B. கலாப்பிரியா C. அப்துல் ரகுமான் D. ஈரோடு தமிழன்பன்
E. விடை தெரியவில்லை

18) ஒருமை - பன்மை பிழை நீக்குக.
குழந்தைகள் .............. இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.
A. தனது B. தமது C. தன்னால் D. தம்மால் E. விடை தெரியவில்லை

19) வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணி எது?
A. உவமையணி B. உருவக அணி C. ஏகதேச உருவக அணி
D. சொல் பின்வருநிலை அணி E. விடை தெரியவில்லை

20) சரியான கூற்றைத் தேர்ந்தெடு (புனையா ஓவியங்கள் பற்றி இலக்கியங்கள்)
1. 'புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்' - தமிழ்ச்சுரங்கம்.
2. 'புனையா ஓவியம் புறம் போந்தன்ன' - சீர்திருத்தக் காப்பியம்.
A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

21) கீழ்க்கண்ட கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?
1. நடை என்னும் சிற்றிதழை நடத்தியவர்.
2. வே.மாலி, செல்வம் என்ற புனைப்பெயர் கொண்டவர்.
3. தாவோ தேஜிங் எனும் சீன மெய்யியல் நூலை தமிழில் மொழி பெயர்த்தவர்.
4. விளக்கு இலக்கிய விருது ஆசான் கவிதை விருது போன்றவை பெற்றவர்.
A. ஜெகதீசன் B. சி.மணி C. வேங்கட மகாலிங்கம் D. வெ.இராமலிங்கனார்
E. விடை தெரியவில்லை

22) சொல் - பொருள் - பொருத்துக.
a. ஈன்று - 1. கிளை
b. கொம்பு - 2 தந்து
c. களித்திட - 3. மிகுந்தசுவை
d. அதிமதுரம் - 4. மகிழ்ந்திட
A. 3 4 1 2 B. 4 1 2 3 C. 2 1 4 3 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

23) சரியான பொருளை அறிக.
வெற்பு
A. வயல் B. மலை C. கலை D. அலை E. விடை தெரியவில்லை

24) கீழ்க்கண்ட கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?
1. புலவரேறு பழநி தண்டபாணியின் மாணவர்.
2. 16வது வயதில் கவியாற்றல் பெற்றவர்.
3. இரணியன், இராவணன், எமதருமன் வேடங்களில் நடித்த போது வயது 24.
4. சமரச சன்மார்க்க சபை என்னும் நாடகக் குழுவை உருவாக்கியவர்.
5. 1918ல் மதுரையில் "தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையை" உருவாக்கியனார்.
A. நாடக உலகின் இமயமலை B. தமிழ் நாடகத் தந்தை C. B மற்றும் D
D. நாடகப் பேராசிரியர் E. விடை தெரியவில்லை

25) 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' - இப்பாடலடி இடம்பெறும் நூல் எது?
A. நாலடியார் B. மூதுரை C. முப்பால் D. ஏலாதி E. விடை தெரியவில்லை

26) சரியான கூற்றைத் தேர்ந்தெடு (காந்தியடிகளின் கடிதம்)

1. காந்தியடிகள், முன்சிராம் குறித்துக் கூறும்போது, அவரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம், ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த அறிவு மட்டுமன்று தம்முடைய தாய்மொழி மீது அவருக்கு இருந்த பற்றுதலும் தான்.

2. இரவீந்திரநாத் தாகூர் குறித்து கூறுகையில், இவர் பேசும் போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்பதற்கு, அவரின் தாய்மொழி அறிவே காரணமாகும்.

3. மதன்மோகன் மாளவியா குறித்து கூறுகையில் இவரின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைப் போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப்பேச்சு தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது.

A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 3 மட்டும் D. மேற்கண்ட அனைத்தும்
E. விடை தெரியவில்லை

27) துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் - நீ சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்" - இப்பாடலின் ஆசிரியர் யார்?

A. காந்தியக் கவிஞர் B. மக்கள் கவிஞர் C. கவியரசர் D. கவிப்பேரரசு
E. விடை தெரியவில்லை

28) வற்றல் தின்றான் - ஆகுபெயர் கூறுக.

A. பொருளாகு பெயர் B. பண்பாகு பெயர் C. தொழிலாகு பெயர்
D. காரியவாகு பெயர் E. விடை தெரியவில்லை

29) தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. குதிரை உருவங்களைச் சிற்பங்களில் அமைத்தல் - 1. நாயக்கர் காலம்
2. ஆயிரங்கால் மண்டபங்கள் அமைத்தல் - 2. விஜயநகர காலம்
3. குறவன், குறத்தி சிற்பங்கள் - 3. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் (ம) கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி

A. 1 (ம) 2 B. 3 மட்டும் C. 1 (ம) 3 D. 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

30) ஐம்பூதங்களை தொல்காப்பியம் எவ்வாறு வரிசைப்படுத்தியுள்ளது?

A. நீர், நிலம், காற்று, வெப்பம், வானம் B. வானம், நிலம், நீர், காற்று, வெப்பம்
C. நிலம், வெப்பம், நீர், காற்று, வானம் D. நிலம், காற்று, நீர், வெப்பம், வானம்
E. விடை தெரியவில்லை

31) கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் எது?

A. விசும்பு B. வாரா C. செந்நீ D. வளர்வானம் E. விடை தெரியவில்லை

32) (ஒரு - ஓர்) நிறைவு செய்க.

அது ................ இனிய பாடல்.

A. ஒரு B. ஓர் C. ஒன்று D. ஒன்றாம் E. விடை தெரியவில்லை

33) 'தேம்பாவணி' நூலின் பாடல்கள் எண்ணிக்கை?

A. 3363 B. 3614 C. 3615 D. 3100 E. விடை தெரியவில்லை

34) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' யார்?

A. அதிவீரராம பாண்டியர் B. முதலாம் இராசராசசோழன் C. முதலாம் குலோத்துங்கன்
D. இரண்டாம் ராசராசசோழன் E. விடை தெரியவில்லை

35) 'பிறப்பினால் எவர்க்கும் உலகில் பெருமை வாராதப்பா' என்று கூறியவர்

A. சிற்பி பாலசுப்பிரமணியம் B. சி.மணி C. கண்ணதாசன் D. கவிமணி

E. விடை தெரியவில்லை

36) 'பூக்களைப் பறிக்காதீர்' இது எவ்வகைத் தொடர்?

A. கட்டளைத் தொடர் B. வினாத்தொடர் C. செய்தித்தொடர் D. உணர்ச்சித் தொடர்

E. விடை தெரியவில்லை

37) பொருத்தமற்ற இணையைக் காண்க. (தமிழர் கடற்பயணங்கள்)

1. யவனர்கள் பொன்னைக் கொடுத்து அதற்கு ஈடாக மிளகை எந்திச் சென்ற செய்தி - அகநானூறு.

2. புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள் அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்த செய்தி - புறநானூறு.

3. கரிகாலனின் முன்னோர் காற்றின் திசை அறிந்து கலம் செலுத்திய செய்தி - பட்டினப்பாலை

A. 2, 3 B. 1, 3 C. 3 மட்டும் D. 2 மட்டும் E. விடை தெரியவில்லை

38) கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதை ............. என்பர்

A. தற்பவம் B. திரிசொல் C. இயற்சொல் D. தற்சமம் E. விடை தெரியவில்லை

39) 'கவிஞரேறு' என்று சிறப்பிக்கப் பெற்றவர்?

A. வாணிதாசன் B. பெருஞ்சித்திரனார் C. வரதநஞ்சையப்பிள்ளை D. கண்ணதாசன்

E. விடை தெரியவில்லை

40) அகநானூற்றில் 6, 16, 26 என்று எண்களாக வரும் திணை எது?

A. பாலை B. குறிஞ்சி C. நெய்தல் D. மருதம் E. விடை தெரியவில்லை

41) சொற்களின் கூட்டுப் பெயர்களை எழுதுக.

நெல்

A. வயல் B. புதர் C. தோட்டம் D. கொல்லை E. விடை தெரியவில்லை

42) பொருத்துக.

a. வாழை - 1. குரும்பை

b. வெள்ளரி - 2. பிஞ்சு

c. பனம் - 3. கச்சல்

d. மா - 4. வடு

A. 4 1 2 3 B. 3 2 1 4 C. 1 2 3 4 D. 2 3 1 4 E. விடை தெரியவில்லை

43) "ஆசாரம்" என்பதன் பொருள் தருக.

A. கல்வி B. ஒழுக்கம் C. செல்வம் D. அழகு E. விடை தெரியவில்லை

44) 'இஸ்மத் சன்னியாசி' என்ற சொல் எந்த மொழிக்கு உரியது?

A. கிரேக்கம் B. சமஸ்கிருதம் C. அரபு D. பாரசீகம் E. விடை தெரியவில்லை

45) சொல்லுக்கேற்ற கூட்டப் பெயர் காண்க.

புல்

A. புற்கள் B. கற்கள் C. புல்கள் D. புட்கள் E. விடை தெரியவில்லை

46) இளங்கோவடிகள் முதன்மை கொடுத்துப் பாடிய மலை ....................

A. இமயமலை B. கொல்லிமலை C. பொதிகை மலை D. விந்திய மலை

E. விடை தெரியவில்லை

தின்ணை

திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர், தேனி. 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

47) ஏலாதி 4 அடிகளில் எத்தனை கருத்துக்களைக் கூறுகிறது?

A. 3 B. 4 C. 5 D. 6 E. விடை தெரியவில்லை

48) ஏறுதழுவுதல் பற்றிக் கூறும் நூல் எது?

A. அகநானூறு B. புறநானூறு C. கலித்தொகை D. பரிபாடல்

E. விடை தெரியவில்லை

49) பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

A. பத்து B. பாட்டு C. பாக்கு D. பஞ்சு E. விடை தெரியவில்லை

50) சரியான கலைச்சொற்களைத் தேர்ந்தெடுக்க.

*AGRONOMY*

A. வேளாண்மை B. உழவியல் C. நீர்ப்பாசனம் D. நாட்டுப்புறவியல்

E. விடை தெரியவில்லை

51) பின்வரும் கூற்றுகளைக் காண்க.

கூற்று 1 : போலி என்னும் சொல் "போல இருத்தல்" என்பதிலிருந்து தோன்றியது.

கூற்று 2 : போலி மூன்று வகைப்படும்.

கூற்று 3 : மூவகைப் போலிகள் மட்டுமின்றி வேறு ஒருவகைப் போலியும் உண்டு.

A. அனைத்தும் சரி B. கூற்று 1, 2 சரி, 3 தவறு C. கூற்று 1, 2 தவறு, 3 சரி

D. அனைத்தும் தவறு E. விடை தெரியவில்லை

52) விளக்கு - இரு பொருள் தருக.

A. உண்டாக்குதல் - ஒளி தரும் சாதனம் B. விவரித்தல் - ஒளி தரும் சாதனம்

C. மலர்தல் - ஒழி D. பாத்திரம் - ஒளி தரும் சாதனம்.

E. விடை தெரியவில்லை

53) குழந்தையின் தலை அசையும் பருவத்தின் பெயர் அறிக.

A. சப்பாணி B. வருகை C. அம்புலி D. செங்கீரை E. விடை தெரியவில்லை

54) பொருத்துக.

a. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - 1. உவமையணி

b. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு - 2. ஏகதேச உருவக அணி

c. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - 3. எடுத்துக்காட்டு உவமையணி

d. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று - 4. இல்பொருள் உவமையணி

A. 2 3 1 4 B. 4 3 1 2 C. 2 1 3 4 D. 4 1 3 2 E. விடை தெரியவில்லை

55) 'குண்டம்' எதைக் குறிக்கிறது?

A. உவர்நீர் நிலை B. இடத்தின் பெயர் C. கமலைக் கிணறு

D. குளிக்கும் நீர்நிலை E. விடை தெரியவில்லை

56) படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்

A. சுவாமிமலை B. கும்பகோணம் C. மதுரை D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

57) காரைக்குடி மீ.சு.உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றியவர்?

A. சுரதா B. கண்ணதாசன் C. முடியரசன் D. நா.காமராசன்

E. விடை தெரியவில்லை

58) முந்தை யிருந்து நட்போர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள நூல்?

A. நற்றிணை B. குறுந்தொகை C. ஐங்குறுநூறு D. கலித்தொகை

E. விடை தெரியவில்லை

59) "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்" - என்ற பாடல் வரியைப் பாடியவர்

A. மிளைகிழான் நல்வேட்டனார் B. மோசிகீரனார் C. இளம்சேரல் இரும்பொறை

D. திருவள்ளுவர் E. விடை தெரியவில்லை

60) அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.

(விளைநிலம்)

A. ..............கள் அனைத்தும் மூடுபனியில் முழுகிக் கிடக்கின்றன.

B. ..............கள் அனைத்தும் மூடுபனியில் வளர்கின்றது.

C. .............கள் அனைத்தும் மூடுபனியில் மிதக்கின்றன.

D. ............கள் அனைத்தும் மூடுபனியில் ஒளிருகின்றது.

E. விடை தெரியவில்லை

61) பொருத்தமான காலம் அமைத்தல் :

கபிலன் வேலை செய்தால் ஊதியம் பெறுவான்.

A. இறந்த காலம் B. நிகழ்காலம் C. எதிர்காலம் D. முக்காலம்

E. விடை தெரியவில்லை

62) ஊர் பெயரின் மரூஉ -ஐத் தேர்வு செய்க.

'சோழநாடு'

A. சோழ தேசம் B. சோழ் நாடு C. சோணாடு D. சோநாடு

E. விடை தெரியவில்லை

63) உவமை கூறும் சரியான பொருளை எழுதுக.

"கொடி கட்டிப் பறத்தல்"

A. ஆராய்ந்து பாராமல் செயல்படுதல் B. எல்லாராலும் இகழப்படுதல்

C. புகழ்பெற்று விளங்குதல் D. உயரமாக இருத்தல் E. விடை தெரியவில்லை

64) இலக்கணக்குறிப்பு தருக.

மாறன் களிறு

A. இரண்டாம் வேற்றுமைத் தொகை B. ஆறாம் வேற்றுமைத் தொகை

C. ஏழாம் வேற்றுமைத் தொகை D. நான்காம் வேற்றுமைத் தொகை

E. விடை தெரியவில்லை

65) பொருந்தா இணையினைத தேர்க.

A. திருக்குறள் நீதி இலக்கியம் - க.த.திருநாவுக்கரசு.

B. திருமலை முருகன் பள்ளு - அழகிய பெரியவன்.

C. அன்றாட வாழ்வில் அறிவியல் - ச.தமிழ்ச்செல்வன்.

D. உலகின் மிகச்சிறிய தவளை - எஸ்.இராமகிருஷ்ணன்.

E. விடை தெரியவில்லை

66) திருமறைக்காடு என அழைக்கப்படுவது

A. திருக்கழுக்குன்றம் B. விருத்தாச்சலம் C. வேதாரண்யம் D. ஆற்காடு

E. விடை தெரியவில்லை

67) இளமையில் ............. முதுமையில் வருத்தம் - இப்பழமொழியில் விடுபட்ட சொல்லைக் கண்டறிக.

A. முயற்சியின்மை B. சோம்பல் C. ஒழுக்கம் கெடுதல் D. மகிழ்ச்சி

E. விடை தெரியவில்லை

68) ‘உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி’ என்று கூறியவர்?

A. வல்லிக்கண்ணன் B. நா.பாரதிதாசன் C. நா.பார்த்தசாரதி D. ந.பிச்சமூர்த்தி

E. விடை தெரியவில்லை

69) ‘எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி’ என ஓவியத்தின் சிறப்பை பழந்தமிழர் அறிந்திருந்தனர் என்பதைக் காட்டும் தமிழ் இலக்கிய நூல்?

A. பட்டினப்பாலை B. மதுரைக்காஞ்சி C. திருமுருகாற்றுப்படை

D. குற்றாலக்குறவஞ்சி E. விடை தெரியவில்லை

70) சித்தர்களில் ‘கலகக்காரர்’ எனக் கருதப்படுபவர் யார்?

A. கடுவெளிச் சித்தர் B. பட்டினத்தார் C. பத்திரகிரியார் D. சிவவாக்கியர்

E. விடை தெரியவில்லை

71) இலக்கணக் குறிப்பு தருக.

உயர்துலை

A. வினைத்தொகை B. உரிச்சொற்றொடர் C. உவமைத்தொகை D. உருவகம்

E. விடை தெரியவில்லை

72) இருகினால் .......... இளகினால் கூழ் - இப்பழமொழியில் விடுபட்ட சொல்லைக் கண்டறி.

A. புட்டு B. களி C. சோறு D. இட்லி E. விடை தெரியவில்லை

73) ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை தெரிவு செய்க.

*Lexicon*

A. உருபன் B. ஒப்பிலக்கணம் C. பேரகராதி D. ஒலியன் E. விடை தெரியவில்லை

74) மதுரையில் கண்ணகி, கோவலனை ஆதரித்தவர் யார்?

A. மாதவி B. மாதரி C. சாலினி D. தேவந்தி E. விடை தெரியவில்லை

75) பொருள் தருக. புலம்பு

A. வெள்ளம் B. கண்ணி C. மாலை D. தனிமை E. விடை தெரியவில்லை

76) தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்கு தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன் அவர்களை இயற்றமிழ் மாணவர் எனவும் பெயரிட்டு அழைத்தவர்?

A. மறைமலை அடிகள் B. சங்கரதாச சுவாமிகள் C. பரிதிமாற் கலைஞர்

D. பம்மல் சம்பந்தனார் E. விடை தெரியவில்லை

77) வளர்பிறை என்பது - இலக்கணக்குறிப்பு தருக.

A. பண்புத்தொகை B. வினைத்தொகை C. வேற்றுமைத்தொகை D. உவமைத்தொகை

E. விடை தெரியவில்லை

78) ஒரு விசயத்தை பற்றி நன்கு அறியாமல் அது இப்படி தான் என்று முன்கூட்டியே ஒரு தீர்மானத்திற்கு வந்துவிடுவது தவறு - இப்பொருளுக்கேற்ற பழமொழியை தேர்வு செய்க.

A. இலங்கையில் பிறந்தவனெல்லாம் ராவணனில்லை.

B. அடுக்கிற அருமை உடைக்கிற நாய்க்கு தெரியுமா.

C. அடாது செய்தவன் படாது படுவான்.

D. இவற்றில் எதுவுமில்லை.

E. விடை தெரியவில்லை

79) ‘க’ என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு தவறான பொருள் எது?

A. அரசன் B. காற்று C. காத்தல் D. மயில் E. விடை தெரியவில்லை

80) ............... எடுப்பதனை விட .............. எடுப்பது கடினமான பணியாகும்.

A. கருத்துப்படம், விளக்கப்படம் B. திரைப்படம், செய்திப்படம்

C. செய்திப்படம், திரைப்படம் D. விளக்கப்படம், கல்விப்படம்

E. விடை தெரியவில்லை

81) சீவக சிந்தாமணியின் உட்பிரிவு எந்த சொல்லால் அழைக்கப்படுகிறது?

A. காதை B. படலம் C. காண்டம் D. இலம்பகம் E. விடை தெரியவில்லை

82) “ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும் அப்படித்தான்” என்று கூறியவர் யார்?

A. மு.மேத்தா B. பசுவையா C. நா.பிச்சமூர்த்தி D. ஈரோடு தமிழன்பன்

E. விடை தெரியவில்லை

83) பொருத்துக.

a. உத்தர வேதம் - 1. நாலடியார்

b. தமிழர் வேதம் - 2. திருவாய்மொழி

c. திராவிட வேதம் - 3. திருமந்திரம்

d. வேளாண் வேதம் - 4. திருக்குறள்

A. 4 3 2 1 B. 4 2 3 1 C. 3 4 2 1 D. 3 2 4 1 E. விடை தெரியவில்லை

84) இராமாயணத்தில் கம்பர் எழுதாத காண்டம்?

A. உத்தர காண்டம் B. சுந்தர காண்டம் C. பால காண்டம்

D. அயோத்தியா காண்டம் E. விடை தெரியவில்லை

85) ‘எடுத்தனன் உண்டான்’ - இலக்கணக் குறிப்பு தருக.

A. பெயரெச்சம் B. வினைமுற்று C. முற்றெச்சம் D. வினையெச்சம்

E. விடை தெரியவில்லை

86) அருளொடும் அன்பொடும் <u>வாராப்</u> பொருளாக்கம்
புல்லார் புரள விடல் - இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு இலக்கணக் குறிப்பு தருக.

A. உரிச்சொற்றொடர் B. வினையெச்சம் C. இரண்டாம் வேற்றுமைத்தொகை

D. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் E. விடை தெரியவில்லை

87) தமிழ் இலக்கியத்தில் இரு தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள ஒரே நூல்?

A. சிறுபாணாற்றுப்படை B. பெரும்பாணாற்றுப்படை C. பொருநராற்றுப்படை

D. திருமுருகாற்றுப்படை E. விடை தெரியவில்லை

88) இலக்கணக் குறிப்பு தருக - பெருமிதம்

A. முற்றும்மை B. பெயரெச்சம் C. பண்புத்தொகை D. தொழிற்பெயர்

E. விடை தெரியவில்லை

89) பிழையற்ற தொடரைத் தேர்க.

A. நாங்கள் ஏழைகள் அல்ல B. அணைகள் நிரம்பியது C. புலிகள் புல்லைத் தின்னா

D. இவர்தான் என் நண்பர் E. விடை தெரியவில்லை

90) "இளைய தலைமுறையே; எழுவாய்!
செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்!
அறிவில் மூத்தோரைத் தொழுவாய்!
அரிய பயன் காண ஆழ உழுவாய்!" - என்று கூறியவர் யார்?

A. அண்ணா B. திரு.வி.க C. பாரதிதாசன் D. கருணாநிதி

E. விடை தெரியவில்லை

91) 'காலின் ஏழடி பின்சென்று' என்ற அடிகளின் ஆசிரியர் யார்?

A. காவற்பெண்டு B. முடத்தாமக் கண்ணியார் C. ஔவையார்

D. வெண்ணிகுயத்தியார் E. விடை தெரியவில்லை

92) பத்துப்பாட்டில் மிகப்பெரிய நூல் எது?

A. மலைபடுகடாம் B. முல்லைப்பாட்டு C. பெரும்பாணாற்றுப்படை D. மதுரைக்காஞ்சி

E. விடை தெரியவில்லை

93) குமரகுருபரர் இயற்றிய நூல்களில் அல்லாதது எது?

A. கந்தர் கலிவெண்பா B. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் C. மதுரைக்கலம்பம்

D. திருக்கை வழக்கம் E. விடை தெரியவில்லை

94) 'கல்வி இல்லா மின்னாளை வாழ்வில் என்றும்
<u>மின்னாள்</u> என்றே உரைப்பேன்' என்னும் பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொல் தரும் பொருள் என்ன?

A. அறிவற்றவள் B. மின்னலைப் போன்றவள் C. ஒளிரமாட்டாள் D. மடமையானவள்

E. விடை தெரியவில்லை

95) 'கெழீஇய' என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.

A. செய்யுளிசை அளபெடை B. இன்னிசை அளபெடை C. சொல்லிசை அளபெடை

D. ஒற்றளபெடை E. விடை தெரியவில்லை

96) பேருந்துகளில் திருவள்ளுவர் உருவமும், திருக்குறளும் இடம்பெற சட்டம் இயற்றியவர்

A. காமராசர் B. எம்.ஜி.ஆர் C. கருணாநதி D. அண்ணா E. விடை தெரியவில்லை

97) சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

*HERITAGE*

A. பாரம்பரியம் B. கலப்படம் C. பண்டம் D. கடற்பயணம்

E. விடை தெரியவில்லை

98) சொற்களை மாற்றியமைத்து சரியான தொடரைத் தேர்ந்தெடு.

A. சேரர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது.

B. விளங்கியது வஞ்சி தலைநகராக சேரர்களின்.

C. விளங்கியது தலைநகராக சேரர்களின் வஞ்சி.

D. வஞ்சி தலைநகராக விளங்கியது சேரர்களின்.

E. விடை தெரியவில்லை

99) அடைப்புக்குள் உள்ள கொழுந்து வகை குறித்த சொல்லைத் தகுந்த வாக்கியத்துடன் பொருத்துக.
(கொழுந்தாடை)
A. பனையின் கொழுந்து B. கரும்பின் நுனிப்பகுதி C. புளியின் கொழுந்து
D. வேம்பின் கொழுந்து E. விடை தெரியவில்லை

100) சிலப்பதிகாரத்துடன் தொடர்புடைய கூற்று எது?
1. 7 வகை இசையை கூறும் நூல்.
2. 8 வகை தானியங்கள் வீதிகளை கூறும் நூல்.
3. 11 வகை ஆடல் வகை கூறும் நூல்.
A. 1, 2 சரி B. 1, 3 தவறு C. அனைத்தும் சரி D. அனைத்தும் தவறு
E. விடை தெரியவில்லை

101) "$E-2025$" முன்னெடுப்பு .............. உடன் தொடர்புடையது
A. உயிரி எத்தனால் கலப்பு B. மின்கழிவு மேலாண்மை C. மலேரியா கட்டுப்பாடு
D. தடுப்பூசி விழிப்புணர்வு E. விடை தெரியவில்லை

102) தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையால் (DITDS) உருவாக்கப்பட்ட வளர் 4.0 என்பது யாருக்கு உதவுகிறது?
A. தொழில் முனைவோர் B. பெண்கள் C. அரசு அலுவலகங்கள் D. குழந்தைகள்
E. விடை தெரியவில்லை

103) 2022-2023 ம் ஆண்டு சிறந்த சுகாதார செயல்பாடுகளுக்கான தமிழ்நாட்டின் முன்மாதிரி கிராம விருது பெற்ற கிராம ஊராட்சி எது?
A. நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் B. சூளூர், ஈரோடு C. வடலூர், கடலூர்
D. பிச்சனூர், கோயம்புத்தூர் E. விடை தெரியவில்லை

104) மோயர் ஆறு கீழ்கண்ட எந்த பீடபூமியை மைசூர் பீடபூமியிலிருந்து பிரிக்கிறது?
A. பாரமகால் பீடபூமி B. கோயமுத்தூர் பீடபூமி C. ஷிகூர் பீடபூமி
D. நீலகிரி பீடபூமி E. விடை தெரியவில்லை

105) பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. தமிழ்நாடு மின்னாளுகை முகமை | - | 1. 2021 |
| b. மின் ஆவணக் காப்பகம் | - | 2. 2006 |
| c. தேசிய மின்னாளுகை நிர்வாக திட்டம் | - | 3. 2007 |
| d. முதலமைச்சர் தகவல் பலகை | - | 4. 2017 |

A. 1 4 2 3 B. 4 3 2 1 C. 3 4 2 1 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

106) நிதி ஆயோக் வெளியிடும் சுகாதார குறியீட்டு அறிக்கையின் (2021) படி பின்வரும் மாநிலங்களை வரிசைப்படுத்துக.
1. தமிழ்நாடு
2. தெலுங்கானா
3. கேரளா
A. 1-2-3 B. 2-3-1 C. 3-2-1 D. 3-1-2 E. விடை தெரியவில்லை

107) 2023ல் மாநில அரசாங்கம், எந்த மாநகராட்சியை மாநிலத்தின் சிறந்த மாநகராட்சியாக தேர்வு செய்துள்ளது?

A. கோயம்புத்தூர் B. தாம்பரம் C. சேலம் D. திருச்சி E. விடை தெரியவில்லை

108) பொருத்துக. (மின்னாளுகை)

a. இ-சேவை - 1. 2019
b. இ-அடங்கல் மொபைல் செயலி - 2. 2018
c. தூண்டில் - 3. 2017
d. தமிழர் தகவலாற்றுப்படை - 4. 2014

A. 4 1 2 3 B. 4 2 1 3 C. 2 4 1 3 D. 2 4 3 1 E. விடை தெரியவில்லை

109) தமிழக அரசின் இலவச மகளிர் பயணம் திட்டம் மூலம் பெண்கள் மாதம் எவ்வளவு சேமிப்பதாக சமீபத்தில் தமிழ்நாட்டின் திட்டக்குழு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது?

A. ரூ.888 B. ரூ.916 C. ரூ.948 D. ரூ.984 E. விடை தெரியவில்லை

110) நாட்டிலேயே முதல்முறையாக புதுமை முயற்சிகளை ஒருங்கிணைக்கும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) எங்கு திறக்கப்பட்டுள்ளது?

A. அண்ணா பல்கலைக்கழகம் B. தலைமைச் செயலாளர் அலுவலகம்
C. தமிழ்நாடு சட்டப்பேரவை வளாகம் D. கன்னிமாரா பொது நூலகம்
E. விடை தெரியவில்லை

111) நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

A. $SDG$ 5 - பாலின சமத்துவம்.
B. $SDG$ 7 - பொருளாதார வளர்ச்சி.
C. $SDG$ 10 - ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
D. $SDG$ 4 - தரமான கல்வி.
E. விடை தெரியவில்லை

112) மதராஸ் மாகாணத்தில் 1937ஆம் ஆண்ட நடைபெற்ற தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றி பெற காரணங்களில் பொருத்தமானது எது/எவை?

A. நீதிக்கட்சியின் வீழ்ச்சி B. தேர்தல் அரசியலில் பெரியார்
C. வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழ் D. இவையனைத்தும்
E. விடை தெரியவில்லை

113) ஒரு செவ்வகத்தின் மூலைவிட்டம் $\sqrt{41}$ செ.மீ (ம) அதன் பரப்பு 20 ச.செ.மீ எனில் செவ்வகத்தின் சுற்றளவு

A. 9 செ.மீ B. 41 செ.மீ C. 20 செ.மீ D. 18 செ.மீ E. விடை தெரியவில்லை

114) "எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு" - என்னும் திருக்குறளில் உலகம் என்ற சொல் குறிப்பது?

A. உலகோர் B. கற்றவர் C. கடவுள் D. உயர்ந்தோர் E. விடை தெரியவில்லை

115) பெண்ணியக் கருத்துக்களை பேசம் பெண் மதிமாலை என்ற நூலை இயற்றியவர்?

A. தஞ்சை வேதநாயக சாஸ்திரி B. மாயூரம் வேதநாயகம் C. திரு.வி.க.
D. பாரதிதாசன் E. விடை தெரியவில்லை

116) "அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை" - இக்குறளில் பொன்றும் என்னும் சொல்லின் பொருள்

A. சாகும் காலம் B. தோல்விக் காலம் C. மறுமை D. வயதான காலம்

E. விடை தெரியவில்லை

117) சரியல்லாத பொருத்தத்தை கண்டறிக.

1) பிளினி - இயற்கை வரலாறு
2) தாலமி - புவியியல்
3) கௌடில்யர் - அர்த்த சாஸ்திரம்
4) ஹெரட்டோனதீஸ் - வியன்னா பாப்பிரஸ்

A. ஒரு இணை மட்டும் B. இரண்டு இணைகள் C. மூன்று இணைகள்
D. நான்கு இணைகள் E. விடை தெரியவில்லை

118) கீழ்கண்ட எந்த நூலானது காவிரிப் பூம்பட்டினம் என்பதனை "கபெரிஸ் எம்போரியம்' என்று குறிப்பிடுகிறது?

A. வியன்னா பாப்பிரஸ் B. புவியியல் C. எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ்
D. இயற்கை வரலாறு E. விடை தெரியவில்லை

119) உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக பரிந்துரை அளிக்க அமைக்கப்பட்ட அசோக் மேத்தா தலைமையிலான குழு தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1. 1977 டிசம்பரில் அமைக்கப்பட்ட இக்குழு மொத்தம் 132 பரிந்துரைகளை அளித்தது.
2. இதன் பரிந்துரைகளில் ஒன்றான இரண்டு அடுக்கு பஞ்சாயத்து முறையில் ஜில்லா பரிஷித்தும் மண்டல பஞ்சாயத்தும் முக்கியமானதாகும்.
3. இக்குழு தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்று கூறியது.

A. 1, 2, 3 B. 2 மட்டும் C. 1, 2 D. 1 மட்டும் E. விடை தெரியவில்லை

120) உடனடியாக மாநிலங்களுக்கிடையேயான குழுவை உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்த குழு

A. சர்க்காரியா குழு B. முதலாவது நிர்வாக சீர்திருத்த ஆணையம்
C. ராஜமன்னார் குழு D. பூஞ்சி ஆணையம் E. விடை தெரியவில்லை

121) *IX* அட்டவணையில் சேர்க்கப்படும் கூறுகளும் நீதிமன்ற மறுஆய்வுக்கு உட்பட்டது என தீர்ப்பு வெளியான வழக்கு?

A. கேசவானந்த பாரதி வழக்கு B. *IR* கோல்கோ வழக்கு C. சந்திரகுமார் வழக்கு
D. பரமானந்த கட்டாரா வழக்கு E. விடை தெரியவில்லை

122) சரியான பொருத்தங்களை கண்டறிக. (இந்தியாவின் கூட்டாட்சி குறித்து)

1. கூட்டுறவு கூட்டாட்சி - கிரான்வில் ஆஸ்டின்
2. இந்தியாவின் கூட்டாட்சி தனித்துவமானது - பேராசிரியர் அலெக்சான்ட்ராவிக்ஸ்
3. பகுதியளவு கூட்டாட்சி - பேராசிரியர் வேர்

A. 1 மட்டும் B. 1, 3 C. 2 மட்டும் D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

123) இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ள செயலிகளில் பொருத்தமில்லாதவற்றை தேர்ந்தெடுக்கவும்.

1. KYC App 2. C- VIGIL App 3. Voter Helpline App
4. Saksham App 5. Suvitha App

A. 1, 2, 3, 4 B. 1, 4, 5 C. 1, 5 D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

124) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1. தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 சட்டப்படி 1994, அக்டோபர் 12ல் புதுதில்லியில் நிறுவப்பட்டது.

2. ஒரு தலைவர் (ம) 5 உறுப்பினர்களை கொண்ட இவ்வமைப்பானது அரசியலமைப்பு சாராத அமைப்பாகும்.

3. $NHRC$ ன் தலைவர் (ம) உறுப்பினர்களை தேர்வு செய்யும் தேர்வுக்குழுவில் மக்களவை சபாநாயகரும், மாநிலங்களவை தலைவரும் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

4. இதன் தலைவர் (ம) உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது.

A. 4 மட்டும் B. 2, 3 மட்டும் C. 1, 2 மட்டும் D. 2 மட்டும்

E. விடை தெரியவில்லை

125) தேர்தல் சீர்திருத்தக் குழுக்களை காலவரிசைப்படுத்துக.

1. தினேஷ் கோஸ்வாமி குழு

2. டங்கா குழு

3. $JS$ வர்மா குழு

4. இந்திரஜித் குப்தா குழு

A. 1-2-4-3 B. 4-1-2-3 C. 1-4-2-3 D. 4-1-3-2 E. விடை தெரியவில்லை

126) தமிழ்நாட்டின் தற்போதைய மாநகராட்சிகளின் எண்ணிக்கை

A. 21 B. 22 C. 24 D. 25 E. விடை தெரியவில்லை

127) இந்திய அரசியலமைப்பின் தூண்களாக கருதப்படுபவை

1. இந்திய தேர்தல் ஆணையம்

2. மத்திய பணியாளர் தேர்வாணையம்

3. இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளர்

4. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்

A. 1, 3 B. 2, 3, 4 C. 1, 2, 3 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

128) இந்திய பாராளுமன்றம் தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1. இந்தியக் குடியரசுத் தலைவர், மாநிலங்களவை (ம) மக்களவை பாராளுமன்றத்தின் பகுதிகளாகும்.

2. பகுதி $V$ விதி 79 - 122 இந்தியப் பாராளுமன்றம் குறித்து கூறுகின்றன.

3. நாட்டின் இரண்டாவது ஆட்சிமன்றம் மாநிலங்களவை.

4. மக்களவையில் இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 104ன் படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

A. இவையனைத்தும் B. 2, 4 C. 2, 3, 4 D. 2, 3 E. விடை தெரியவில்லை

129) இந்தியக் குடியரசுத் தலைவர் தொடர்பான கூற்றுகளுள் தவறானது எது?

1. வரையறுக்கப்பட்ட ரத்து (Qualified Veto) அதிகாரம் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு பொருந்தாது.

2. சரத்து 80(3)ன் படி ராஜ்ய சபாவிற்கு 12 உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.

3. இவரின் பதவிநீக்கம் இரு அவைகளிலும் $\frac{2}{3}$ பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற பிறகே நடைபெறுகிறது.

4. குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான பிரச்சகைளை விதி 71ன் படி உச்சநீதிமன்றம் தீர்த்து வைக்கும்.

A. 1 மட்டும் B. 2, 4 மட்டும் C. 1, 3 மட்டும் D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

130) அரசு நெறிமுறைப்படுத்தும் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அடிப்படை உரிமைகளை திருத்தம் செய்ய பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என தீர்ப்பு வெளியான வழக்கு

A. கேசவானந்த பாரதி வழக்கு (1973) B. மினர்வா மில் வழக்கு (1980)
C. கோலக்நாத் வழக்கு (1967) D. ரதிலால் பன்சாந்த் வழக்கு (1954)
E. விடை தெரியவில்லை

131) அடிப்படை உரிமை விதி 19ன் கீழ் கூறப்பட்டுள்ளவற்றை வரிசைப்படுத்துக.

1. வணிகம், தொழில் செய்ய உரிமை.
2. இந்திய எல்லைக்குள் சுதந்திரமாக உலவ உரிமை.
3. அமைதியாக கூட்டம் சேர உரிமை.
4. பேச்சுரிமை

A. 4-3-2-1 B. 2-3-4-1 C. 4-1-2-3 D. 3-2-1-4 E. விடை தெரியவில்லை

132) 1955 குடியுரிமை திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குடியுரிமை நீக்கம் தொடர்பான வழிமுறைகளில் சரியானது எது?

1. தானாக முன்வந்து துறத்தல் (Renunciation)
2. குடியுரிமை முடிவுக்கு வருதல் (Termination)
3. குடியுரிமை மறுக்கப்படுதல் (Deprivation)

A. 1, 2 B. 2 மட்டும் C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

133) குரங்கம்மை நோய் ஒரு .............. பரவக்கூடிய நோய்

A. பூஞ்சை B. பாக்டீரியா C. வைரஸ் D. புரோட்டோசோவா
E. விடை தெரியவில்லை

134) பொருத்துக. (முகவுரை தொடர்பான அறிஞர்களின் கூற்று)

a. அரசியலமைப்பின் ஆதாரம் - 1. சர் என்னெஸ்ட் பார்க்கர்
b. அரசியலமைப்பின் திறவுகோல் - 2. பண்டிட் தாகூர் தாஸ் பார்கவா
c. இறையாண்மை கொண்ட மக்களாட்சி குடியரசின் ஜாதகம் - 3. கே.எம்.முன்ஷி
d. அடையாள அட்டை - 4. N.A. பால்கிவாலா

A. 1 3 2 4 B. 3 2 1 4 C. 2 3 1 4 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

135) பிரம்ம சமாஜம் தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1. பிரம்ம சமாஜத்தின் கருத்துக்களை இந்தியன் மிரர் பத்திரிக்கை பரப்பியது.
2. இவ்வமைப்பு ஆதி பிரம்ம சமாஜம், இந்திய பிரம்ம சமாஜம் (ம) சாதாரண பிரம்ம சமாஜம் என மூன்றாக பிரிக்கப்பட்டது.
3. சாதி முறை, தீண்டாமை, சதி, உருவ வழிபாடு போன்றவற்றை எதிர்த்தது.

A. 1, 2, 3 B. 1, 3 C. 3 மட்டும் D. 2, 3 E. விடை தெரியவில்லை

136) புத்தரின் போதனைகள் நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொருந்தாதது எது?

1. சுத்த பீடகம் 2. அபிதம்ம பீடகம் 3. வினய பீடகம்

A. 2 மட்டும் B. 1 மட்டும் C. 1, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

137) முதல் சமண சமய மாநாடு நடைபெற்ற இடம்

A. வல்லபி B. பாடலிபுத்திரம் C. ராஜகிருஹம் D. வைசாலி

E. விடை தெரியவில்லை

138) மதுரை சுல்தானியம் தன்னை சுதந்திர அரசாக பின்வரும் எந்த மன்னரின் ஆட்சிக்காலத்தில் அறிவித்தது?

A. அலாவுதீன் கில்ஜி B. ஜலாலுதீன் கில்ஜி C. முகமது பின் துக்ளக்

D. பெரோஷா துக்ளக் E. விடை தெரியவில்லை

139) பாண்டியப் பேரரசில் இரும்பு உலோக வேலை செய்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம்

A. இறையிலி B. பட்ட விருத்தி C. தட்டார் காணி D. தச்சர் மானியம்

E. விடை தெரியவில்லை

140) இராஜேந்திர சோழனின் ஜலமய ஜெயஸ்தம்பத்தினை வியந்து பாராட்டிய வெளிநாட்டுப் பயணி

A. அல்பெருனி B. மார்க்கோ போலோ C. இபின் பதூதா D. நிகிடி

E. விடை தெரியவில்லை

141) தில்லி சுல்தானியத்தின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையை தாமாகவே துறந்து தில்லிக்கு வெளியே 30 ஆண்டுகளில் மனநிறைவோடு வாழ்ந்த சுல்தான்

A. பஹ்லுல் லோடி B. சிக்கந்தர் லோடி C. ஆலம் ஷா D. நஸ்ரூதின் முகமது ஷா

E. விடை தெரியவில்லை

142) சாகர்களை அழித்தவர் என்ற பொருள் கொண்ட “சாகரி” பட்டத்தை சூட்டிக் கொண்டவர்

A. சமுத்திர குப்தர் B. முதலாம் சந்திரகுப்தர் C. இரண்டாம் சந்திரகுப்தர்

D. குமரா குப்தர் E. விடை தெரியவில்லை

143) மௌண்ட்பேட்டன் திட்ட வெளியீடு, இந்திய விடுதலை ஆகியவற்றுக்கான கால இடைவெளி

A. 68 நாட்கள் B. 84 நாட்கள் C. 75 நாட்கள் D. 72 நாட்கள்

E. விடை தெரியவில்லை

144) சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசை சுபாஸ் சந்திர போஸ் நிறுவிய இடம்

A. மலேசியா B. ஜப்பான் C. சிங்கப்பூர் D. ஜெர்மனி E. விடை தெரியவில்லை

145) காந்தியால் “பின்தேதியிட்ட காசோலை” என விமர்சிக்கப்பட்டது?

A. ஆகஸ்ட் அறிக்கை B. கிரிப்ஸின் முன்மொழிவு C. ஆகஸ்ட் நன்கொடை

D. அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டம் E. விடை தெரியவில்லை

146) கூற்று : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் தனித்தொகுதி கொள்கையை பின்பற்றியது.

காரணம் : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

A. கூற்று (ம) காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.

B. கூற்று சரி காரணம் தவறு.

C. கூற்று (ம) காரணம் சரி மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

D. கூற்று (ம) காரணம் தவறு.

E. விடை தெரியவில்லை

147) பிரிவினைவாத தேசியத்தின் வளர்ச்சி குறித்த தனது மன வேதனையை "நாட்டை உருவாக்கிய இந்துக்கள், சீக்கியர்கள், முகமதியர்கள், பார்சிகள், கிறித்தவர்கள் ஆகிய அனைவரும் நாட்டின் சக மனிதர்களே" என்று வெளிப்படுத்தியவர்?

A. ஜவஹர்லால் நேரு B. மௌலானா அபுல்கலாம் ஆசாத் C. வல்லபாய் படேல்

D. மகாத்மா காந்தி E. விடை தெரியவில்லை

148) கிலாபத் இயக்கம் துவங்கப்பட காரணங்களுள் பொருத்தமில்லாதது?

1. துருக்கியின் கலீ.ஃபாவை பாதுகாக்க.

2. முதல் உலகப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயர் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற தவறியதால்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1, 2 D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

149) வகுப்புவாதம் தேசியவாதம் என்ற கருத்தாக்கத்திற்கு முற்றிலும் எதிரானது என்று கூறியவர்

A. மௌலானா அபுல்கலாம் ஆசாத் B. இரவீந்திரநாத் தாகூர் C. மகாத்மா காந்தி

D. ஜவஹர்லால் நேரு E. விடை தெரியவில்லை

150) பொருத்தமான இணையை கண்டறிக.

1. பெங்கால் நிலக்கரி நிறுவனம் - ராய்கஞ்ச்.
2. முதல் சணல் உற்பத்தி ஆலை - கல்கத்தா.
3. இந்தியருக்குச் சொந்தமான தேசிய தோல்பதனிடும் தொழிற்சாலை - கல்கத்தா.
4. கூப்பர் பேப்பர் மில் - லக்னோ

A. ஒரு இணை மட்டும் B. இரண்டு இணைகள் C. மூன்று இணைகள்

D. நான்கு இணைகள் E. விடை தெரியவில்லை

151) நரம்பு செல்கள் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?

1. நரம்பு செல்லின் உடலம் கிளைத்த, நீண்ட நரம்பு நார்களைக் கொண்டவை.

2. உடலின் செயல்களை ஒருங்கிணைத்தல் (ம) செய்தி பரிமாற்றம் போன்றவை இவற்றின் பணிகள்.

A. 1, 2 சரி B. 1 மட்டும் C. 2 மட்டும் D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

152) சரியான இணையைக் கண்டறிக.

1. அனீமியா - $RBC$ எண்ணிக்கை குறைதல்.
2. லியூக்கோபினியா - $WBC$ எண்ணிக்கை குறைதல்.
3. லியூக்கொசைட்டோசிஸ் - $WBC$ எண்ணிக்கை அதிகரித்தல்.
4. திராம்போசைட்டோபினியா - இரத்தத் தட்டுகளின் எண்ணிக்கை குறைதல்.

A. ஒரு இணை மட்டும் B. இரண்டு இணைகள் C. மூன்று இணைகள்

D. நான்கு இணைகள் E. விடை தெரியவில்லை

153) லியூக்கோசைட்டுகளிலேயே மிகப்பெரியவை

A. நியூட்ரோ.ஃபில்கள் B. ஈசினோ.ஃபில்கள் C. மோனோசைட்டுகள்

D. லிம்போசைட்டுகள் E. விடை தெரியவில்லை

154) பொருத்துக.

a. பாரன்கைமா - 1. ஒளிச்சேர்க்கை

b. குளோரன்கைமா - 2. பாதுகாப்பு

c. கோலன்கைமா - 3. உறுதித்தன்மை

d. ஸ்கிளிரென்கைமா - 4. உணவு சேமித்தல்

A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 4 1 2 3 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

155) நீரின் கிராம் மூலக்கூறு நிறை

A. 36.5 கி B. 44 கி C. 18 கி D. 17 கி E. விடை தெரியவில்லை

156) எதிரொலி விளைவு நடைபெறாமல் இருக்க நிபந்தனைகளில் எக்கூற்று தவறானது?

1. இரண்டு ஒலிகளுக்கு இடையே கால இடைவெளி குறைந்தபட்சம் 0.1 விநாடிகள் இருக்க வேண்டும்.

2. எதிரொலி கேட்க குறைந்தபட்ச தொலைவு 17.2 மீ.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1, 2 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

157) ஜூல் விளைவின் பயன்களில் பொருந்தாதது எது?

1. மின்சார வெப்பமேற்றும் சாதனங்கள்.

2. மின் உருகு இழை.

3. மின் விளக்கில் உள்ள மின் இழை.

A. 1, 2, 3 B. 2, 3 C. 1, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

158) கீழ்க்காணும் இணைகளில் சரியான இணைகளைக் கண்டறிக.

1. குமரி முனை - தென் முனை

2. கிரிக் - மேற்கு முனை

3. கிரிபாஸ் - வடக்கு முனை

4. கிபித்து - கிழக்கு முனை

A. ஒரு இணை மட்டும் சரி B. இரண்டு இணைகள் மட்டும் சரி C. மூன்று இணைகள் சரி D. நான்கு இணைகள் சரி E. விடை தெரியவில்லை

159) தென்மேற்கு பருவக்காற்று காலம் தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1. இப்பருவக்காற்றின் இடி (ம) மின்னலுடன் கூடிய துவக்கம் பருவமழை வெடிப்பு எனப்படும்.

2. இக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும்போது அரபிக்கடல் (ம) வங்காள விரிகுடா கிளை என இரண்டாகப் பிரிகிறது.

3. ஆரவல்லி மலைத்தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் (ம) வடஇந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

4. ஜெட் காற்றோட்டம் (ம) எல்நினோ நிகழ்வு இக்காற்றின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

A. 1, 2, 3, 4 B. 2, 3 C. 1, 2 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

160) பின்வருவனவற்றில் தவறான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்.

1. நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தில் வயநாடு வனவிலங்கு சரணாலயமும் அடங்கும்.

2. நீலகிரி உயிர்க்கோள காப்பகம் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பரவியுள்ளது.

3. நம்தபா உயிர்க்கோள காப்பகம் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ளது.

4. நந்தாதேவி உயிர்க்கோள காப்பகம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது.

A. 1, 2 B. 1, 3, 4 மட்டும் C. 3, 4 மட்டும் D. 2, 3 E. விடை தெரியவில்லை

161) கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைக் கண்டறிக.

1. பேசல் மாநாடு - பல்லுயிர் பெருக்கம் பேணுதல்.
2. கியோட்டா நெறிமுறை - காலநிலை மாற்றம்.
3. மேன்ட்ரியல் நெறிமுறை - காற்று மாசுபாடு.
4. ராம்சார் மாநாடு - நிலத்தடி நீர் மாசுபாடு.

A. 1, 2 B. 2 மட்டும் C. 1, 3, 4 D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

162) சுனாமி முன்னறிவிப்பு செய்வதற்காக INCOIS என்ற அமைப்பானது அமைந்துள்ள இடம்

A. சென்னை B. பெங்களுரு C. ஹைதராபாத் D. கன்னியாகுமரி

E. விடை தெரியவில்லை

163) கூற்று : 2030க்குள் நிலையான வளர்ச்சி இலக்குகள் உலகளாவிய அர்ப்பணிப்பின் அடிப்படையில் வறுமை, சமத்துவமின்மை (ம) அநீதியை சமாளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

காரணம் : இது பெண்களின் அதிகாரம் (ம) நல்வாழ்வுக்கான தனித்துவமான இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

A. கூற்று சரி, காரணம் தவறு

B. கூற்று, காரணம் இரண்டும் தவறு

C. கூற்று தவறு, காரணம் சரி

D. கூற்று, காரணம் சரி, மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

E. விடை தெரியவில்லை

164) கூற்றை ஆராய்க.

1. திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதை குறிக்கிறது - நேரு.
2. உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ, புற நகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" - காந்தியடிகள்.

A. 1, 2 சரி B. 2 மட்டும் சரி C. 1, 2 தவறு D. 1 மட்டும் சரி

E. விடை தெரியவில்லை

165) பல பரிமாண வறுமை குறியீடு கீழ் உள்ள குறிகாட்டிகளில் எவற்றை உள்ளடக்கவில்லை?

1. கல்வி 2. சந்தை 3. சுகாதாரம் 4. வாழ்க்கை நிலை

A. 3 மட்டும் B. 2 மட்டும் C. 1, 2 D. 1, 3 E. விடை தெரியவில்லை

166) பொருத்துக.

a. SIPCOT - 1971
b. TANSIDCO - 1970
c. TIDCO - 1965
d. ELCOT - 1977

A. 1 2 4 3 B. 1 4 2 3 C. 1 2 3 4 D. 1 4 3 2 E. விடை தெரியவில்லை

167) முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பற்றி பின்வரும் அறிக்கைகளை ஆராய்க.

1. இந்தியாவிலேயே முதன் முறையாக இத்திட்டம் தமிழ்நாட்டில் தான் துவங்கப்பட்டது.
2. இத்திட்டத்திற்கான அறிவிப்பு 2022 மே 5ஆம் தேதி சட்டப்பேரவையில் வெளியானது.

3. இத்திட்டம் மதுரை மாவட்டம் நெல்பேட்டை மாநகராட்சி பள்ளியில் செப்டம்பர் 15, 2022 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

மேற்கண்ட கூற்றுகளுள் பொருத்தமில்லாததை தேர்ந்தெடுக்க.

A. 1, 3 B. 2, 3 C. 3 மட்டும் D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

168) பின்வரும் இணைகளைப் பொருத்துக.

a. இல்லம் தேடிக் கல்வி திட்டம் - 1. சீலநாயக்கன்பட்டி
b. மக்களைத் தேடி மருத்துவம் - 2. முதலியார் குப்பம்
c. பெரியார் நினைவு சமத்துவபுரம் - 3. சமணப்பள்ளி
d. நமக்குநாமே திட்டம் - 4. பெரிய கொழுவாரி

A. 3 2 4 1 B. 4 3 2 1 C. 1 2 3 4 D. 2 3 4 1 E. விடை தெரியவில்லை

169) “எங்கிருந்தும் எந்நேரமும்” இத்திட்டம் தொடர்புடைய துறை

A. மாநில போக்குவரத்துத் துறை
B. எரிசக்தித் துறை
C. தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை.
D. வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை.
E. விடை தெரியவில்லை

170) தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை (2024-25) தொடர்பான கூற்றுகளுள் சரியானது?

1. 2024-25 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிப்பற்றாக்குறை 3.44% ஆகக் குறைந்துள்ளது.
2. மாநிலத்தின் பணவீக்கம் 5.97% ஆக உள்ளது.
3. இந்தியப் பொருளாதாரத்தின் *GDP* யில் 9% பங்கை அளித்து தமிழ்நாடு இரண்டாவது மிகப்பெரிய பங்களிப்பாளராக உள்ளது.

A. 1, 2, 3 B. 2, 3 C. 2 மட்டும் D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

171) கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடு.

1. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் 08.02.2023 துவக்கி வைக்கப்பட்டது.
2. இத்திட்டத்திற்கு “புதுமைப்பெண்” என்று பெயரிடப்பட்டுள்ளது.
3. இத்திட்டத்தின்முதல் கட்டம் செப்டம்பர் 05, 2022 முதல்வரால் துவங்கி வைக்கப்பட்டது.
4. அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு உயர்கல்வியை உறுதிசெய்யும் வகையில் மாதந்தோறும் ரூ.1000 நிதியுதவி அளித்தலே இத்திட்டத்தின் நோக்கம்.
5. இத்திட்டத்திற்கான அறிவிப்பு 18 மார்ச் 2022ல் சட்டப்பேரவையில் வெளியானது.

A. 1, 2, 4 B. 2, 3, 5 C. 1, 4, 5 D. அனைத்தும் சரி E. விடை தெரியவில்லை

172) 2023 ஆகஸ்ட் நிலவரப்படி GST இழப்பீடு அதிகம் பெறும் மாநிலங்களை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக.

1. தமிழ்நாடு
2. கர்நாடகா
3. குஜராத்
4. மகாராஷ்டிரா
5. பஞ்சாப்

A. 2 3 4 1 5 B. 4 2 3 1 5 C. 3 2 1 5 4 D. 1 2 3 4 5

E. விடை தெரியவில்லை

173) நிதி ஆயோக் வெளியிட்டுள்ள $SDG$ அறிக்கை (2023 - 24) தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?

1. மொத்த 17 இலக்குகளில் 13 இலக்குகளில் தமிழ்நாடு முன்னிலை பெற்றுள்ளது.
2. மலிவான (ம) சுத்தமான எரி ஆற்றல் இலக்கில் தமிழ்நாடு 100 மதிப்பெண் பெற்றுள்ளது.
3. உயர்கல்விக்கான சேர்க்கை விகிதம் 47% ஐ தமிழ்நாடு அடைந்துள்ளது.

A. 1, 2, 3 சரி B. 2, 3 சரி C. 1, 3 சரி D. 1 மட்டும் சரி
E. விடை தெரியவில்லை

174) மத்திய அரசின் பட்ஜெட்டில் (2024 - 25) நிதிப்பற்றாக்குறை

A. 4.7% B. 4.8% C. 4.9% D. 4.6% E. விடை தெரியவில்லை

175) தமிழக அரசின் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது பின்வரும் யாருக்கு வழங்கப்பட்டது?

A. பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் B. கமலம் சின்னச்சாமி C. கிரிஜா குமார் பாபு
D. சாந்தி துரைசாமி E. விடை தெரியவில்லை

176) 2024ஆம் ஆண்டின் தமிழுக்கான சிறந்த மொழிபெயர்ப்பு விருது யாருக்கு வழங்கப்பட்டது?

A. கண்ணையன் தட்சிணாமூர்த்தி B. கே.நல்லதம்பி C. மாலன் D. கே.செல்லப்பன்
E. விடை தெரியவில்லை

177) ஒரு உருளை வடிவத் தொட்டியின் கொள்ளளவு 1848 மீ$^3$ அதன் அடிப்பக்க விட்டம் 14 மீ எனில் அத்தொட்டியின் ஆழம் காண்க.

A. 8 மீ B. 9 மீ C. 12 மீ D. 13 மீ E. விடை தெரியவில்லை

178) $A\ 26\ B\ 25\ C\ 24\ D\ 23 \ldots\ldots\ldots\ldots\ldots\ldots Z\ 1$ என நாம் எழுதும் போது 2 என்ற இலக்கத்தின் அருகே வரும் ஆங்கில எழுத்துக்கள் எத்தனை?

A. 7 B. 8 C. 9 D. 10 E. விடை தெரியவில்லை

179) ஒரு குறிப்பிட்ட தொகை ஆண்டிற்கு எந்த வட்டி விகிதத்தில் இருந்தால், அந்தத் தொகை 16 வருடங்களில் இரு மடங்காகும்?

A. $7\frac{3}{4}\%$ B. $6\frac{3}{4}\%$ C. $8\frac{2}{3}\%$ D. $6\frac{1}{4}\%$ E. விடை தெரியவில்லை

180) இரு பகடைகள் ஒரு சேர உருட்டப்படுகின்றன. முக எண்களைக் கொண்டு அமைக்கப்படும் ஈரிலக்க எண் 4 ஆல் வகுபடும் எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு காண்க.

A. $\frac{1}{2}$ B. $\frac{1}{4}$ C. $\frac{1}{36}$ D. $\frac{1}{6}$ E. விடை தெரியவில்லை

181) $\frac{x}{5} = \frac{y}{8}$ எனில் $(x+5):(Y+8)$ ன் மதிப்பு

A. 5 : 8 B. 8 : 5 C. 2 : 5 D. 5 : 2 E. விடை தெரியவில்லை

182) $\frac{38\times38\times38+34\times34\times34+28\times28\times28-3\times38\times34\times28}{38\times38+34\times34+28\times28-38\times34-34\times28-38\times28}$ ன் மதிப்பு

A. 100 B. 44 C. 32 D. 24 E. விடை தெரியவில்லை

183) $\sqrt{9\sqrt{9\sqrt{9\ldots\ldots\ldots\ldots\ldots\ldots}}}\ \infty$

A. 3 B. 9 C. $\sqrt[3]{9}$ D. $9^3$ E. விடை தெரியவில்லை

184) $9+3+1+\ldots\ldots\ldots..\infty$ என்னும் தொடரின் கூடுதல் காண்க.

A. $\frac{37}{2}$ B. $\frac{27}{2}$ C. $\frac{47}{2}$ D. $\frac{17}{2}$ E. விடை தெரியவில்லை

185) $ABCD$ என்பது $BDFH$ என எழுதப்பட்டால் எது $MNOP$ என எழுதப்பட்டிருக்கும்?

A. $LLLL$ B. $LMMO$ C. $LMNN$ D. $LMNO$ E. விடை தெரியவில்லை

186) $A \rightarrow 1, B \rightarrow 2, C \rightarrow 3, \ldots\ldots\ldots . Z \rightarrow 26$ எனக் கொண்டால் கீழ்க்காண்பனவற்றுள் எது தவறு?

A. $\sqrt{I \times L \times L} = F^B$ B. $HCF\,(J, O, Y) = E$ C. $\sqrt{Y} + \sqrt{P} = I$ D. $C^B = F$

E. விடை தெரியவில்லை

187) ஒரு பகடை இருமுறை உருட்டப்படுகிறது. முதலாவதாக உருட்டப்படும்போது ஒரு இரட்டைப் பகடை எண் கிடைத்தல் அல்லது அவ்விரு உருட்டலில் முக எண்களின் கூடுதல் 6 ஆக இருத்தல் எனும் நிகழ்ச்சியின் நிகழ்தகவினைக் காண்க.

A. $\frac{21}{36}$ B. $\frac{5}{36}$ C. $\frac{20}{36}$ D. $\frac{14}{36}$ E. விடை தெரியவில்லை

188) $x, y$ என்பன மிகப்பெரிய மற்றும் மிகச்சிறிய மூன்றிலக்க எண்கள். இவை 3 ஆல் வகுபடக் கூடியன மற்றும் 2, 9 ஆகியவற்றால் வகுபடாதவை எனில் $x - y$ ன் மதிப்பு

A. 888 B. 897 C. 899 D. 898 E. விடை தெரியவில்லை

189) A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 72 நாட்களில் முடிப்பார் எனில், B தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A. 48 B. 24 C. 36 D. 60 E. விடை தெரியவில்லை

190) களிமண்ணைப் பயன்படுத்தி ஒரு மாணவன் 48 செ.மீ உயரமும், 12 செ.மீ ஆரமும் கொண்ட நேர் வட்டத் திண்மக் கூம்பைச் செய்தார். அக்கூம்பை மற்றொரு மாணவர் ஒரு திண்ம கோளமாக மாற்றினார். அவ்வாறு மாற்றப்பட்ட கோளத்தின் ஆரத்தைக் காண்க.

A. 48 செ.மீ B. 12 செ.மீ C. 144 செ.மீ D. 36 செ.மீ E. விடை தெரியவில்லை

191) ஒரு அரைக்கோளத்தின் மொத்தப் புறப்பரப்பு $6k^2$ எனில் அதேஆரமுள்ள கோளத்தின் புறப்பரப்பினை பின்வருவனவற்றுள் எது குறிக்கிறது?

A. $4k^2$ B. $4\pi k^2$ C. $8\pi k^2$ D. $8k^2$ E. விடை தெரியவில்லை

192) ஒருவர் 10 பங்குகளை ரூ.25000க்கு வாங்குகிறார். அதன் மதிப்பு முதலாம் ஆண்டில் 4% உயர்கிறது. இரண்டாம் ஆண்டில் 8% உயர்கிறது. மூன்றாம் ஆண்டில் 10% குறைகிறது எனில் மூன்றாம் ஆண்டின் முடிவில் உள்ள மொத்த தொகை எவ்வளவு?

A. ரூ.25672 B. ரூ.25372 C. ரூ.25472 D. ரூ.25272 E. விடை தெரியவில்லை

193) ஓர் அசல் தொகை ஆண்டுக்கு 10% தனிவட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் ரூ.20100 ஆக உயர்ந்தது எனில் அசலைக் காண்க.

A. ரூ.13400 B. ரூ.10050 C. ரூ.40200 D. ரூ.15100 E. விடை தெரியவில்லை

194) ஒரு உயர்நிலைப் பள்ளியில் 450 மாணவர்கள், 15 ஆசிரியர்கள் மற்றும் 3 நிர்வாகிகள் என உள்ளனர். பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை 1050 ஆக உயர்ந்தால், மேற்கண்ட விகிதத்தில் எத்தனை ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் இருப்பர் எனக் காண்க.

A. 35, 7 B. 15, 3 C. 30, 6 D. 7, 35 E. விடை தெரியவில்லை

195) $y^3 - 125, (y-5)^2, y^2 - 25$ ஆகியவற்றின் மீ.பொ.ம காண்க.

A. $(y-5)^2(y+5)(y^2+5y+25)$ B. $(y-5)(y+5)$ C. $(y-5)^2$

D. $(y-5)^3$ E. விடை தெரியவில்லை

196) 8000 இன் 25% மதிப்பின் 20% மதிப்பின் 10% என்பது என்ன?

A. 2000 B. 500 C. 400 D. 40 E. விடை தெரியவில்லை

197) 2! + 3! + 4! + ........... + 22! என்ற கூடுதலின் ஒன்றாம் இலக்க எண்?

A. 1 B. 2 C. 3 D. 4 E. விடை தெரியவில்லை

198) 10 விவசாயிகள் 21 நாள்களில் நிலத்தை உழுது முடிக்கின்றனர் எனில் அதே நிலத்தை 14 விவசாயிகள் உழுதால் குறைக்கப்பட்ட நாட்களில் கண்டறிக.

A. 15 நாள்கள் B. 9 நாள்கள் C. 6 நாள்கள் D. 8 நாள்கள்

E. விடை தெரியவில்லை

199) ஒரு வகையான பாக்டீரியா, முதலாவது ஒரு மணி நேரத்தில் 5% வளர்ச்சியும், இரண்டாவது மணி நேரத்தில் 8% வளர்ச்சி குன்றியும், மூன்றாவது மணி நேரத்தில் 10% வளர்ச்சியும் அடைகிறது. தொடக்கத்தில் அதன் எண்ணிக்கை 10000 ஆக இருந்தது எனில் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதன் எண்ணிக்கையைக் காண்க.

A. 22,474 B. 10,626 C. 2,24,740 D. 1,06,260 E. விடை தெரியவில்லை

200) ஒரு கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையின் விகிதம் 8 : 7 என்க. 10% மற்றும் 20% முறையே மாணவ, மாணவியரின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டால், மாணவ மாணவிகளின் புதிய விகிதம் என்ன?

A. 10 : 20 B. 11 : 12 C. 22 : 21 D. 12 : 11 E. விடை தெரியவில்லை

## Group II, IIA - 2024

## MODEL 1 - Answer Key

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **C** | **B** | **B** | **C** | **A** | **C** | **C** | **A** | **D** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **D** | **D** | **C** | **C** | **A** | **C** | **B** | **D** | **A** | **C** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **C** | **B** | **A** | **A** | **C** | **B** | **C** | **A** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **B** | **B** | **C** | **D** | **D** | **A** | **A** | **D** | **A** | **D** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **A** | **B** | **B** | **D** | **A** | **C** | **D** | **C** | **D** | **B** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **A** | **B** | **D** | **A** | **D** | **D** | **C** | **A** | **A** | **A** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **C** | **C** | **B** | **B** | **C** | **B** | **D** | **B** | **D** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **A** | **B** | **C** | **B** | **D** | **C** | **B** | **A** | **C** | **A** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **D** | **D** | **A** | **A** | **C** | **D** | **D** | **D** | **C** | **D** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **B** | **D** | **D** | **C** | **C** | **D** | **A** | **A** | **B** | **C** |
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 |
| **C** | **A** | **A** | **B** | **C** | **D** | **D** | **A** | **A** | **A** |
| 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **B** | **D** | **D** | **D** | **B** | **A** | **A** | **B** | **A** | **C** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 |
| **B** | **D** | **D** | **D** | **C** | **D** | **C** | **A** | **D** | **C** |
| 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| **A** | **D** | **C** | **D** | **A** | **D** | **B** | **C** | **C** | **A** |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| **C** | **C** | **D** | **C** | **B** | **A** | **D** | **D** | **D** | **D** |
| 151 | 152 | 153 | 154 | 155 | 156 | 157 | 158 | 159 | 160 |
| **A** | **D** | **C** | **C** | **C** | **C** | **D** | **D** | **A** | **B** |
| 161 | 162 | 163 | 164 | 165 | 166 | 167 | 168 | 169 | 170 |
| **B** | **C** | **D** | **A** | **B** | **C** | **D** | **D** | **D** | **A** |
| 171 | 172 | 173 | 174 | 175 | 176 | 177 | 178 | 179 | 180 |
| **D** | **B** | **A** | **C** | **A** | **A** | **C** | **D** | **D** | **B** |
| 181 | 182 | 183 | 184 | 185 | 186 | 187 | 188 | 189 | 190 |
| **A** | **A** | **B** | **B** | **A** | **D** | **A** | **A** | **C** | **B** |
| 191 | 192 | 193 | 194 | 195 | 196 | 197 | 198 | 199 | 200 |
| **D** | **D** | **A** | **A** | **A** | **D** | **B** | **C** | **B** | **C** |